# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 ஐப்பசி 14 வியாழக்கிழமை 31.10.2024 கதிர் 403











## புதிய அமைச்சர்கள் எவருக்கும் கொழும்பில்

# இனி வீடு இல்லை

## ஜனாதிபதி அனுரா உறுதி!

கொழும்பு, அக். 31

நவம்பர் 14 ஆம் திகதிக்குப் பின்னர் அமைக்கப்படும் புதிய அரசாங்கத்தில் அங்கம் வகிக்கப்போகும் அமைச்சர்கள் எவருக்கும் கொழும்பில் வீடுகள் வழங்கப்பட மாட்டாது என்று அநுர குமார திசாநாயக்க உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

"நாட்டைக் கட்டமைப்பதற்கு நாம் ஒன்றாக திசைகாட்டிக்கு" எனும் தொனிப்பொருளில் நேற்று மாலை மாத்தறையில் இடம்பெற்ற பரப்புரைக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

2➤

## லொஹான் ரத்வத்த கண்டியில் கைது!

கொழும்பு, அக் 31

முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த கண்டியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

இலக்கத் தகடுகள் இல்லாத -பதிவு செய்யாத கார் ஒன்று நுகேகொடை மிரிஹானையில் உள்ள அவரது மனைவி வீட்டில் கண்டுபிடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பிலேயே அவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

(இ)

## பருத்தித்துறை இரட்டைக் கொலையின்

# சந்தேகநபர்கள் இருவர் கைது மற்றொருவருக்கு வலைவீச்சு

பருத்தித்துறை, அக் 31

யாழ்ப்பாணம், பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கற்கோவளம் -புனிதநகர் பகுதியில் கணவன், மனைவி ஆகியோர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், மற்றொருவரும் பொலஸார் தேடி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தொழில் போட்டி காரணமான தனிப்பட்ட பகையே கொலையில் முடிந்திருப்பதாக ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பருத்தித்துறை, கற்கோவளம்-புனிதநகர் பகுதியில் கொங்கிறீட் கற்களால் தலையில் தாக்கப்பட்டுக் கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்ட கணவன், மனைவி நேற்றுச் சடலங்களாக மீட்கப்பட்டிருந்தனர். பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒப்பந்த அடிப்படையில் சலவைத் தொழிலில் ஈடுபட்டு வரும் 54 வயதுடைய மாணிக்கம் சுப்பிரமணியம் மற்றும் அவரது மனைவியான 53 வயதுடைய சுப்பிரமணியம் மேரி ரீட்டா ஆகியோரே சடலங்களாக மீட்கப்பட்டனர்.

காங்கேசன்துறை பொலிஸ் ஊளவுப் பிரிவுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் கொலையாளிகள் மூவரில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். ஒருவர் தலைமறைவாகியுள்ளார்.

(ஐ)

# வெள்ள நிவாரணப் பணிகளுக்காக சீனா 400 மில்லியன் ரூபா உதவி!

கொழும்பு, அக்.31

இலங்கைக்கு 400 மில்லியன் ஷரூபா பெறுமதியான மனிதாபிமான உதவிகளை வழங்க சீன அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அண்மைய நாட்களில் நாட்டில் ஏற்பட்ட வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் நலன் கருதி இந்த உதவி வழங்கப்படவுள்ளதாக சீனத் தூதரகம் தனது உத்தியோகபூர்வ எக்ஸ் தளத்தில் குறிப்பிட்டுள்ளது.

சீரற்ற வானிலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக சீன அரசாங்கம் கடந்த 22ஆம் திகதி இலங்கைக்கு 30 மில்லியன் ஷரூபாவை (100,000 அமெரிக்க டொலர்) நன்கொடையாக வழங்கியது.

அந்த நிதியுதவிக்கு மேலதிகமாக இந்த உதவியும் வழங்கப்படுவதாக இலங்கைக்கான சீனத் தூதரகம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

(இ-12)



## இனி வீடு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)







கிராமிய வறுமையை ஒழிப்பதே தற்போதைய அரசாங்கத்தின் முக்கியமான பணி எனத் தெரிவித்த அவர், அங்கு உரையாற்றுகையில், "எதிர்வரும் நாடாளுமன்றத்தில் எந்தவொரு அமைச்சருக்கும் அரசாங்கம் கொழும்பில் வீடுகளை வழங்காது. அமைச்சர்கள் மக்களுக்கு சேவை செய்வதற்கு ஏதுவாக மக்களுடன் நெருக்கமாக இருக்க வேண்டும்.

மாவட்டத்தில் உள்ள மக்களின் பிரச்சினைகளுக்கு அன்றாடம் தீர்வுகளை வழங்குவதற்கு ஏற்றாற் போல மக்களுக்கு நெருக்கமான தலைவர்களை உருவாக்குவது அவசியமாகும்.

மக்களிடமிருந்து வாக்குகளைப் பெற்ற பின்னர், மக்களிடமிருந்து தொலைவில் – கொழும்பில் வாழும் தலைவர்கள் தேவையில்லை. எமது அரசாங்கத்தில் எந்த அமைச்சருக்கும் கொழும்பில் வீடுகள் இல்லை. அரசாங்கம் கொழும்பில் வீடுகளைக் கொடுக்கப் போவதுமில்லை. கிராமங்களுக்கு வாருங்கள், கிராமத்தின் பிரச்சினைகளைப் பாருங்கள். மக்களைத் திரட்டி நாட்டுக்காகப் பணி செய்யுங்கள்.

எனவே, இந்த நாட்டைக் கட்டியெழுப்புவதற்கேற்ற வகையில் அரசாங்கமும், அமைச்சரவையும் எதிர்வரும் 14 ஆம் திகதிக்குப் பின்னர் மாற்றியமைக்கப்படும். இலங்கையில் இவ்வாறான அரசாங்கங்கள் இதுவரை உருவாகவில்லை. கிராமப்புற வறுமையை ஒழிப்பதே தேசிய மக்கள் சக்தி அரசின் தலையாய பணியாகும்." என்றார். (ஐ)

# கடவுச்சீட்டு அலுவலகத்தில் தொடரும் நீண்ட வரிசை

கொழும்பு, அக் 31

கடவுச்சீட்டுதொடர்பில்அவசரதேவைகள் உள்ளவர்களுக்கு மாத்திரம் முன்னுரிமை வழங்குமாறு அரசாங்கம் கோரிக்கை விடுத்திருந்த போதிலும், கடவுச்சீட்டு அலுவலகத்தில் நீண்ட வரிசைகள் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி கோரிக்கையை அமைச்சர் விஜித ஹேரத் கோரிக்கை விடுத்திருந்த நிலையில் நேற்றும் நீண்ட வரிசைகளில் மக்கள்காத்திருந்ததாகதெரிவிக்கப்படுகிறது.

புதிய கடவுச்சீட்டுக்கள் தொகுதிகளாக பெறப்பட்டு வருவதாகவும்நவம்பர் நடுப்பகுதி வரையில்100,000கடவுச்சீட்டுகள்கையிருப்பில் இருக்கும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் விஜித ஹேரத்தெரிவித்திருந்தார்.

அத்துடன், அவசர தேவை உள்ளவர்கள் மட்டும் கடவுச்சீட்டு அலுவலகத்திற்கு வருமாறு அவர் கேட்டுக்கொண்டார்.

இருப்பினும், நூற்றுக்கணக்கானோர் தொடர்ந்தும் வரிசையில் காத்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன் போது அதிகாரிகள் முறையான செயல்முறையை நடைமுறைப்படுத்தாமையால், குழப்பநிலையும் ஏற்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (ஐ)



# நாடாளுமன்றத் தேர்தல் – 2024

யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம் யாழ், கிளிநொச்சி மாவட்டங்கள்

சுதந்திரம் பொது வாக்கெடுப்பு **எமது** பிறப்புரிமை கோரிக்கை

**சிவாஜிலிங்கம்**

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்
செயலாளர் நாயகம் தமிழ்த் தேசியக் கட்சி



**அரசாங்க உத்தியோகத்தர்களே!**
**வணக்கம்**

எதிர்வரும் பாராளுமன்றப் பொதுத்தேர்தலுக்கான தபால் வாக்களிப்பில் கலந்துகொள்ள இருக்கும் உங்களிடம் ஒரு வேண்டுகோள். இதை ஒரு தனிப்பட்ட வேண்டுகோளாக ஏற்றுக்கொண்டு, எனக்கு சங்குச் சின்னத்திலும் 2ஆம் இலக்கத்திற்கு மேலேயும் புள்ளடியிட்டு ஆதரிக்குமாறு, தயவுடன் வேண்டுகின்றேன்.

எனது 50 வருட அரசியல் வாழ்வில், நான் நடத்திய போராட்டங்கள், நினைவேந்தல்களை அரசாங்கம் தடுத்ததை உடைத் தெறிந்த விடயம் உட்பட பாராளுமன்றத்தின் உள்ளும், புறமும் போராடியதை நீங்கள் அறிவீர்கள் அந்தப் பயணத்தைத் தொடர உங்கள் ஆதரவை நாடி நிற்கின்றேன்.

- **தமிழ்த் தேசிய இனத்தின் சுய நிர்ணய உரிமையின் அடிப்படையில் சர்வதேச சமூகம் , வடக்கு கிழக்கு மக்கள் புலம் பெயர் தமிழர்கள் உட்பட அனைவரும் வாக்களிக்கக்கூடிய பொது மக்கள் வாக்கெடுப்பு ஒன்றை (Referendum) நடாத்துமாறு கோருகின்றோம்.**
- **தமிழ்த் தேசிய இனத்தின் வாழ்வுரிமைக்காக போராடுவோம்.**

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
|---|---|---|---|---|---|---|---|---|

**ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி**






தீபாவளித்திருநாளான இன்று, யாழ்ப்பாணத்தின் அனைத்துப் பகுதிகளிலும் மக்கள் தீபாவளிக் கொண்டாட்டங்களில் ஈடுபடுவதை அவதானிக்க முடிந்தது. ஈழத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் அமைதியான முறையில் பக்தி பூர்லமாகப் பொதுமக்கள் வழிபாடுகளில் ஈடுபட்டனர். (படங்கள் : யாழ். தீபன்)






# அடுக்குமாடி குடியிருப்பில் விழுந்த பெண் மரணம்

கொழும்பு, அக் 31

கொழும்பில் சொகுசு அடுக்குமாடி குடியிருப்பின் 9 வது மாடியில் இருந்து விழுந்து பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நாரஹேன்பிட்டி கிரிமண்டல மாவத்தையில் உள்ள ஆக்ஊரியா ரெசிடென்ஸ் 9வது மாடியில் உள்ள குளியல் தொட்டிக்கு அருகில் இருந்து வீட்டை அலங்கரிக்கும் போது பெண் கீழே விழுந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்தில் 29 வயதான லோரா இமாஷா டென்சி என்ற திருமணமாகாத பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் சொகுசு அடுக்குமாடி குடியிருப்பின் 9வது மாடியில் உள்ள மேல் குளியல் தொட்டிக்கு அருகில் தனது புகைப்படங்களை எடுக்க விரும்புவதாக அடுக்குமாடி வளாகம் பாதுகாவலரிடம் உயிரிழந்த பெண் கூறியதாக பாதுகாவலரின் வாக்குமூலத்தில் தெரியவந்துள்ளார்.

உயிரிழந்த பெண் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் இந்த சொகுசு அடுக்குமாடி குடியிருப்பில் வாடகை அடிப்படையில் வீடு எடுத்து தனியாக வசித்து வந்தமை விசாரணையில் மேலும் தெரியவந்துள்ளது.

அவர் மது அருந்தியதாகவும் மன அழுத்தத்தில் இருப்பதாகவும் இறந்தவரின் தாயார் பொலிஸாரிடம் வாக்குமூலம் அளித்துள்ளார்.

மரணம் தொடர்பான உண்மைகள் மற்றும் நீதிமன்ற அறிக்கைகளை கேட்டறிந்த நீதவான் சம்பவ இடத்தில் ஆய்வு மற்றும் பிரேத பரிசோதனையை நடத்தி, பிரேத பரிசோதனை நடத்த உத்தரவிட்டார்.

உயிரிழந்த பெண் குதித்தார விழுந்தாரா என விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(ஐ)

# தமிழர் பிரதிநிதித்துவத்தைப் பாதுகாக்க

# ஒன்றுபட்டு நிற்போம்!

**ஹஸ்பர் ஏ ஹலீம்**



இலங்கையில் ஜனாபதி தேர்தல் முடிந்த கையோடு 17 ஆவது நாடாளுமன்ற தேர்தல் எதிர் வரும் 14 ஆம் திகதி நடைபெறவுள்ளது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தமிழர் தரப்பு பல கட்சிகள், சுயேச்சை குழுக்களாகப் பிரிந்துப் போட்டியிடுகின்றனர். கிழக்கு மாகாணத்தில் இம் முறை அதிகமான வேட்பாளர்கள் களமிறக்கப்பட்ட நிலையில் தமிழ் மக்களுக்கான பிரதிநிதித்துவம் பாதுகாக்கப்படுமா? என்ற கேள்வி பலராலும் எழுப்பப்படுகிறது. இதனைச் சில தமிழ் வேட்பாளர்கள் தங்களது தேர்தல் பரப்புரையின் போது சுட்டிக்காட்டி, இது குறித்த விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்தி வருகின்றனர்.

இலங்கையிலுள்ள 22 தேர்தல் மாவட்டங்களில் இருந்தும் 225 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவார்கள் நாடாளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்படுவார்கள். இவர்களில் 196 பேர் நேரடியாகத் தேர்தல் மூலமும், 29 பேர் தேசியப் பட்டியல் ஊடாகவும் தெரிவு செய்யப்படுவார்கள்.



சிறுபான்மை சமூகங்களில் வாக்களர்கள் வீதம் குறைந்ததன் காரணமாக, யாழ்ப்பாணத்தில் ஏழு ஆசனங்களில், ஒரு ஆசனம் குறைக்கப்பட்டு ஆறு ஆசனங்களாக மாறியுள்ளது. இதுபோல கொழும்பு மாவட் டத்தில் 19 ஆசனங்களில் ஒரு ஆசனம் குறைக்கப்பட்டு 18 ஆக மாறியுள்ளதுடன் கம் பஹா, களுத்துறை மாவட்டங் களில் ஒவ்வொரு ஆசனம் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது. இதற்கான காரணங்களாக வாக்காளர் பதிவுத் தொகையில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளமை, சர்வதேச புலம்பெயர்வு, வாக்களிப்பில் ஆர்வமின்மை போன்ற பல காரணங்கள் குறித்த ஆசன பங்கீடு குறைவுக்கான காரணங்களாக கண்ட றியப்பட்டுள்ளது.

இதனால் வட கிழக்கில் தமிழ் மக்களின் பிரதிநிதித்துவம் இல்லாமல் போக கூடிய சாத்தியம் நிலவி வருகிறது. தமிழ்க் கட்சிகளில் இலங்கை தமிழ் அரசு கட்சி, தமிழ் தேசிய மக்கள் முண்ணனி உட்பட பல கட்சிகள் போட்டியிடுகின்றன இது போன்று ஐக்கிய மக்கள் கூட்டமைப்பு, தேசிய மக்கள் சக்தி, புதிய ஜனநாயக முண்ணனி உட்பட பல பிரதான கட்சிகளும், பல சுயேச்சை குழுக்களும் தமிழர் பகுதிகளில் போட்டியிடுவதனால் வாக்குகள் சிதறிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

குறிப்பாகத் திருகோணமலை மாவட்டத்தில் 3 லட்சத்துப் 15 ஆயிரத்து 925 வாக்காளர்கள் உள்ளனர் இதில் 1 லட்சத்து 31ஆயிரத்து 811 முஸ்லிம் வாக்காளர்களும், 97 ஆயிரத்து 867 தமிழ் வாக்காளர்களும், 84ஆயிரத்து 263 சிங்கள வாக்காளர்களும், ஆயிரத்து 163 ஏனைய வாக்காளர்களும் காணப்பகும் நிலையில் நான்கு பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்காக 17 கட்சிகளும் 14 சுயேச்சை குழுக்கள் என 217 வேட்பாளர்கள் இம் முறை நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

தேர்தல் களம் சூடு பிடித்துள்ள நிலையில் வேட்பாளர்கள் வீடு வீடாக சென்று தேர் தல் பிரச்சாரத்தில் ஈடுபடுகிறார்கள். பல வாக்குறுதிகளை மக்கள் மத்தியில் அள்ளி வீசுகிறார்கள். கள நிலவரம் இறுக்கமாக இருக்கின்ற போதிலும் ஒரு ஜனநாயக ரீதியான, அமைதியான தேர்தலையே மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

தேசிய மக்கள் சக்தி பெரும்பான்மையாக 113 ஆசனங்களை பெறும் என்று ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தேர்தல் மேடைகளில் கூறி வருகின்றார். ஆனால் திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் மக்கள் மத்தியில் கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது தேசிய மக்கள் சக்திக்கு குறைவான வாக்குகளே கிடைக்கப் பெற்றன. தமிழ்ப் பிரதிநிதித்துவம் பாதுகாக்கப்பட வேண்டுமாக இருந்தால் தமிழ் மக்கள் தங்களது உரிமைகளையும் அபிவிருத்திகளையும் இணைந்து கொண்டு செல்லக் கூடிய வேட்பாளர்களுக்கு ஆதரவு வழங்கி பிரதிநிதித்துவத்தை தக்க வைக்கலாம். ஒற்றுமையாகச் செயற்படுவதன் மூலமே தமிழர் பிரதிநிதித்துவத்தைப் பாதுகாக்க முடியும்.

திருகோணமலையை சேர்ந்த சுமார் இரண்டாயிரம் குடும்பங்கள் தமிழ் நாட்டில் வாழ்ந்து வருவதாகவும், கனடாவில் ஐநூ று குடும்பங்கள் வாழ்ந்து வருவதாகவும் புள்ளிவிபரங்களில் இருந்து தெரியவருகிறது. ஆரம்பத்தில் காணப்பட்ட தமிழ் மக்களின் வாக்கு வீதம் தற்போது பன் மடங்கு குறைந்து காணப்படுகிறது. எனவே தமிழ் மக்கள் இந்த தேர்தலில் ஆர்வத்துடன் வாக்களித்து 80 சதவீதத்துக்கும் அதிகமான வாக்குகளை உறுதிப்படுத்துவதன் மூலமே தங்களுக்கான மக்கள் பிரதிநிதித்துவத்தை தெரிவு செய்து பாதுகாத்துக் கொள்ள முடியும்.

திருகோணமலை மாவட்டத்தை பொறுத்த மட்டில் மக்களுடைய பிரச்சினைகளாக நில அபகரிப்பு மற்றும் உரிமைசார் பிரச்சினை காணப்படுகிறது. அப்பாவிப் பொது மக்களின் விவசாயக் காணிகளை அரச திணைக்களங்கள், பௌத்த விகாரைப் பாவனை எனப் பல வழிகளில் அபகரிப்புச் செய்துள்ளனர்.

இதனை மீட்கக் கட்டாயமாகத் தமிழ் பிரதிநிதித்துவம் தேவை. இந்த பிரதிநிதித்துவம் இழக்கப்பட்டால் மக்களது உரிமைகள் பறிபோகக் கூடிய வாய்ப்பு உள்ளது. காலங்காலமாக எந்தொரு அரசாங்கம் மாறி மாறி நாட்டை ஆட்சிசெய்தாலும் சிறுபான்மை மக்களுக்கான தீர்வு கேள்விக்குறியாகவே உள்ளது. இதனை தமிழ் பேசும் சமூகம் உணர்ந்து சரியான பிரதிநிதித்துவத்தை பாதுகாக்க வாக்கு உரிமையைப் பயன்படுத்த வேண்டும்.

ரணில் விக்ரமசிங்க, மஹிந்த ராஜபக்ச, கோத்தபாய ராஜபக்ச, ரணில் – மைத்திரி தேசிய அரசாங்கம் மற்றும் அநுர அரசாங்கம் வரை நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக் கூறலை ஏற்றுள்ளனர். ஆனாலும் தேசிய இனப் பிரச்சினையின் ஒரு தரப்பாகிய ஈழத்தமிழர்களின் எண்ணங்களைக் கடந்த கால இலங்கை அரங்கங்கள் உள்வாங்கியிருக்கவில்லை இதனை இம் முறை வடகிழக்கு மக்கள் நாடாளுமன்ற தேர்தலில் தங்கள் கட்சி சார்பானவர்களுக்கான பலத்தை நிஷரூபித்து ஆசனங்களை கைப்பற்ற வேண்டும்.

அதன் முலமே பலம் பொருந்திய சக்தியாக சிறுபான்மைத் தமிழ்க் கட்சிகள் இருக்கலாம் இல்லாது போனால் நமக்குள் பல பிளவுகள் ஏற்பட்டு வாக்குகள் சிதறிக்கப்படலாம். எனவே ஜனநாயக உரிமைகளுடன் தங்கள் பிரதிநிதிகளைத் தமிழர் தேசத்தில் பாதுகாக்க அனைத்துக்கட்சிகளும் ஒன்றுபட்டு ஒற்றுமையாக பயணித்தால் திருகோணமலை மாவட்டத்தில் இரு தமிழ் பிரதிநிதிகளை பெறலாம் இதற்காக ஒற்றுமையுடன் பயணிப்பதே சாலச் சிறந்தது.


'எமது மக்களுக்கான எனது பணி மேலும்
உத்வேகமாக தொடர்ந்திட ஆதரவளிப்பீர்'
3
தமிழர் விடுதலை கூட்டணி
வன்னி தேர்தல் தொகுதி
செ.சந்திரகுமார்
(கண்ணன்)
சமூக தொண்டன், தமிழ் விருட்சத்தின் ஸ்தாபகர்
வீடுகள்
நிரந்தர கல் வீடுகள் - 28
வீடு திருத்த உதவிகள் - 15
தற்காலிக வீடுகள் - 10
தற்காலிக வீடுகளுக்கு தகரங்கள் வழங்கி புனரமைத்தமை - 45
கிணறுகள்
பொதுக் கிணறு - 02
குழாய்க் கிணறுகள் - 22
மருத்துவ உதவிகள்
மருத்துவ உதவிகள் இதுவரை - 54
கல்வி
கற்றல் உபகரணங்கள் வழங்கியமை இதுவரை - 18,220
பாடசாலைகளுக்கான கல்வி உதவிகள் இதுவரை- 42
பாடசாலைகளுக்கான பயிற்சி கருத்தரங்கு, வளவாளர் கொடுப்பனவு இதுவரை - 28
துவிச்சக்கர வண்டிகள் மாணவர்கள், பெண் - தலைமைத்துவ பெண்கள் இதுவரை -320
மாதாந்த கல்வி உதவிகள் இதுவரை - 380
அறநெறி பாடசாலை கட்டிடம் - 02
உலர் உணவுப் பொதிகள்
உலர் உணவுப் பொதிகள் இதுவரை - 19,800
கொரானா கால மக்கள் துயர்துடைப்பு
உலர் உணவு பொதிகள் வழங்கியமை- 3800
பொங்கற் பானைகள் இதுவரை - 9100
விளையாட்டு
விளையாட்டு நிகழ்வுக்கான அனுசரணை இதுவரை- 60
விளையாட்டு நிகழ்வுக்கு வீரர்கள் வெளிநாடு செல்வதற்கான அனுசரணை இதுவரை- 10
வாழ்வாதார உதவிகள்
பெண் தலைமைத்துவ குடும்பங்கள், முன்னாள் போராளி இதுவரை - 310
பொது நிகழ்வுகள்
கலாசார நிகழ்வுகளுக்கான அனுசரணை இதுவரை- 78
கோவில் அன்னதானம், இல்லங்களுக்கான மதிய உணவு இதுவரை - 1250
இதை விட வவுனியாவிலுள்ள பெரியார் சிலை விழாக்கள், பண்பாட்டு விழாக்கள், சிரமதானம், இரத்ததான முகாம் மற்றும் சக மதத்தினரின் விழாக்கள், நிகழ்வுகள் போன்றவற்றில் கலந்து கொள்ளலும், அனுசரணை வழங்கலும்.
உங்கள் 'அன்பு' எனும் 3 எழுத்தை
'வாக்கு' எனும் 3 எழுத்தாக்கி என்னை
'வெற்றி' எனும் 3 எழுத்தை
அடைய செய்வீர்கள் என்ற நம்பிக்கையில்
உங்களால் நான்,
உங்களுக்காக நான்
எங்கள் சின்னம்
X


நாடாளுமன்றத் தேர்தல் - 2024
யாழ் - கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்
சமூக தொழின் முனைவர், தகவல் தொழில்நுட்ப வல்லுநர்
கௌரி
B.Sc, LL.B (Hons) (UK)
4
தமிழர் இருப்பு,
பொருளாதார
அபிவிருத்தி
உங்களில் ஒருத்தி பாராளுமன்றம் நோக்கி
தமிழர் விடுதலைக் கூட்டணி
1 2 3 4 5 6 7 8 9


நான்கு வகை நிலத்திலும் காணி விற்பனைக்கு!
வடக்கு (யாழ்ப்பாணம்) - கிழக்கு (மட்டக்களப்பு) - மலையகம் (பதுளை)
கி.அரியாலை
மருதம்
வயலுடன் கூடிய
மேட்டுக்காணியும்
பண்ணை வீடும்
பொழுதுபோக்குகளும்...!
எழுதுமட்டுவாழ்
முல்லை
மரங்கள் நிறைந்த
இயற்கை சூழலில்
ஓய்வுகால வீட்டிற்கான
காணித் துண்டுகள்...!
மட்டக்களப்பு
நெய்தல்
கடலும் ஆறும்
அருகருகே அமைந்த
மீன்பாடும் தேன்நாட்டில்
விடுமுறை வீட்டிற்கு...!
அப்புத்தளை
குறிஞ்சி
மலைகளின் நடுவில்
இளிர்ந்த பிரதேசத்தில்
வாசனைத் திரவியமும்
சுற்றுலா விடுதியும்...!
காணி கொள்வனவிற்கு : 0777 43 5557




## ரஞ்சன் ராமநாயக்கவுக்கு எதிரான மனு விசாரணையின்றி தள்ளுபடி

கொழும்பு, அக் 31

2024 பொதுத் தேர்தலில் நடிகரும் அரசியல்வாதியுமான ரஞ்சன் ராமநாயக்கவின் (சுயதெயவ சுயஅயயெலயமந) வேட்புமனுவை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமைகள் மனுவை, விசாரணையின்றி தள்ளுபடி செய்யுமாறு இலங்கை உயர் நீதிமன்றம் நேற்று (30) உத்தரவிட்டுள்ளது.

பிரதிவாதிகள் முன்வைத்த பூர்வாங்க ஆட்சேபனைகளை கருத்திற்கொண்ட பிரீத்தி பத்மன் சுரசேன, குமுதினி விக்கிரமசிங்க மற்றும் அச்சல வெங்கப்புலி ஆகிய மூவரடங்கிய உயர்நீதிமன்ற அமர்வு, மனுவை நிராகரித்து இந்த உத்தரவை பிறப்பித்தது.

கம்பஹா மாவட்டத்தில் போட்டியிடும் சுயேட்சைக்குழு உறுப்பினர் ஒருவர் கடந்த வாரம் உயர்நீதிமன்றில் இந்த மனுவை தாக்கல் செய்திருந்தார்.

ஐக்கிய ஜனநாயக குரல் கட்சி சார்பில் கம்பஹா மாவட்டத்தில் போட்டியிடவுள்ள ரஞ்சன் ராமநாயக்கவின் வேட்புமனுவை நிராகரித்து உத்தரவிடுமாறு மனுதாரர் நீதிமன்றில் கோரியிருந்தார்.

நீதிமன்றால் அவமதிப்பு குற்றத்துக்காக தண்டிக்கப்பட்ட ரஞ்சன் ராமநாயக்கவுக்கு வாக்களிக்கவோ அல்லது நாடாளுமன்றத்தில் அமர்வதற்கோ உரிமை இல்லை என்ற அடிப்படையில் தீர்ப்பளிக்குமாறு மனுதாரர் கோரியிருந்தார்.

(ஐ)






# வர்த்தகரின் வீட்டில் துப்பாக்கி சூடு நடத்திய மர்ம நபர்கள்



கொழும்பு, அக் 31

கொழும்பின் புறநகர் பகுதியிலுள்ள வர்த்தகர் ஒருவரின் வீட்டின் மீது இன்று காலை இனந்தெரியாத நபர்கள் துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மீகொட, பட்டவல பிரதேசத்தில் குறித்த வீட்டின் மீது நான்கு முறை துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாகபொலிஸார்தெரிவிக்கின்றனர்.

எனினும் வீட்டில் இருந்த எவரும் துப்பாக்கி சூட்டுக்கு உள்ளாகவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

குறித்த வர்த்தகரை அச்சுறுத்தும் நோக்கில் குறித்த வீட்டில்துப்பாக்கி சூடு நடத்தியிருக்கலாம் என சந்தேகிக்கப்படுவதாக பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர். (ஐ)



# அரசாங்கம் மீது கேள்விகளை தொடுக்கும் கம்மன்பில

கொழும்பு, அக் 31

உலக வங்கியிடமிருந்து பெறப்பட்ட 200 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் தொடர்பில்ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தரப்பும், உலக வங்கியும் உண்மையாகச் செயற்படுகின்றனவா என்ற உண்மையை அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும் என கோரப்பட்டுள்ளது

முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில இந்த கோரிக்கையை விடுத்துள்ளார்.

இது தொடர்பில், ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த கம்மன்பில, தற்போதைய அரசாங்கம் எந்தவொரு அமைப்பிடமிருந்தோ அல்லது ஸ்தாபனங்களிடமிருந்தோ எந்தவொரு கடனுதவியையும்பெறவில்லைஎன அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமான விஜித ஹேரத் வெளியிட்ட கருத்துக்கு கண்டனம் தெரிவித்துள்ளார்.



இந்தநிலையில், அரசாங்கம் ஆட்சிக்கு வந்து ஒரு மாத காலத்திற்குள் கடன் பெற்றுள்ளதா? இல்லையா என்பதை சரிபார்க்க உலக வங்கியின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தைப் பார்க்குமாறு பொதுமக்களை வலியுறுத்தியுள்ளார்.

இதில் அரசாங்கம் உண்மையாக இருந்தால், உலக வங்கி பொய் சொல்ல வேண்டும் அல்லது உலக வங்கியின் கூற்று உண்மையாக இருந்தால், அமைச்சர் விஜித ஹேரத் பொய் சொல்கிறார் என்ற எடுத்துக்கொள்ள முடியும் என்று கம்மன்பில குறிப்பிட்டுள்ளார்.

நேற்றைய நிலவரப்படி, தற்போதைய அரசாங்கம், திறைசேரி உண்டியல்கள் மற்றும் பத்திரங்கள் மூலம் ஒரு மாதத்தில் 958.75 பில்லியன் ரூபாய் கடன்களை பெற்றுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அரசாங்கம் பணத்தை அச்சிடவில்லை என்ற விஜித ஹேரத்தின் கூற்றையும் கம்மன்பில நிராகரித்துள்ளார்.

அரசாங்கம் தமக்கு நேரடியாகக் கடன் வழங்குவதற்குப் பணத்தை அச்சிடவில்லை என்றாலும், அந்நியச் செலாவணியை வாங்குவதற்கும் நிதிச் சந்தையில் பணப்புழக்கம் மற்றும் ஸ்திரத்தன்மையைப் பேணுவதற்கும் பணம் அச்சிடப்பட்டது என்பதை இலங்கை மத்திய வங்கியின் அறிக்கை வெளிப்படுத்தியுள்ளதாக கம்மன்பில சுட்டிக்காட்டியுள்ளார். (ஐ)







## கோடிக்கணக்கான பெறுமதியான அம்பருடன் சிக்கிய நபர்கள்



கொழும்பு, அக் 31

இலங்கையை சூழவுள்ள ஆழ்கடலில் வாழும் திமிங்கலங்களில் இருந்து பெறப்பட்ட அம்பர் எனப்படும் திமிங்கலத்தின் ஒரு தொகை வாந்தி கைப்பற்றப்பட்டுள்ளது.

இதனை 50 மில்லியன் ரூபாவுக்கு விற்பனை செய்ய முயன்ற சந்தேக நபர்கள் எல்பிட்டிய பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

வளன மத்திய ஊழல் தடுப்பு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த மோசடிக்கு தலைமை தாங்கிய இரண்டு பிரதான சந்தேக நபர்களையும் மேலும் மூன்று சந்தேக நபர்களையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தேகநபர்களிடம் இருந்து 17 கிலோ 234 கிராம் அம்பர் பொலிஸாரால் கைப்பற்றப்பட டுள்ளது.

சந்தேகநபர்கள்மேலதிக விசாரணைகளுக்காக பிட்டிகல பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட் டுள்ளனர். (ஐ)

## எரிபொருள் விலையில் இன்று மாற்றம்

கொழும்பு, அக் 31

விலை சூத்திரத்திற்கு அமைய மாதாந்த எரிபொருள் விலை திருத்தம் இன்றையதினம் மேற்கொள்ளப்படவுள்ளது.

இதற்கு முந்தைய கடந்த 10 மாதங்களில் எரிபொருட்களின் விலை மூன்று தடவைகள் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், ஐந்து தடவைகள் எரிபொருள் விலை குறைக்கப்பட்டுள்ளன.

மார்ச் மற்றும் ஆகஸ்ட் ஆகிய மாதங்களில் எரிபொருள் விலையில் எவ்வித மாற்றமும் செய்யப்படவில்லை.

இதேவேளை, புதிய அரசாங்கத்தின் கீழ் ஒக்டோபர் மாதத்திற்கான எரிபொருள் விலை திருத்தம் செப்டெம்பர் மாதம் 30ஆம் திகதி நள்ளிரவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இந்தநிலையில், நவம்பர் மாதத்திற்கான எரிபொருள் விலை திருத்தம் இன்று மேற் கொள்ளப்படும் என தெரிவிக்கப்படுகின்றது. (ஐ)

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 31.10.2024 இல் வெளியிடப்பெற்றது.